புரட்சிப்

# பெரியார் முழக்கம்

www.dvkperiyar.com

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு | ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | PURATCHI PERIYAR MUZHAKAM

• திருவள்ளுவர் ஆண்டு 2056 • நவம்பர் NOVEMBER, 27 2025 • புரட்சி 25 • முழக்கம்(ISSUE) 48 • விலை(PRICE) ரூ.6.00




### நாகரீக உலகிலும் ஜாதிவெறி தலைதூக்கலாமா? சமத்துவ சிந்தனைகளை மக்கள் மனதில் விதைக்க

# ஜாதி ஒழிப்பு ஆர்ப்பாட்டத்திற்கு தயாராகிறது கழகம்!

திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில், டிசம்பர் 29 அன்று கோவையில் ஜாதிய தீண்டாமைக்கு எதிரான மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது. மாநிலம் தழுவிய அளவிலான இந்த ஆர்ப்பாட்டத்தை ஒட்டி, கோவை மாநகரின் பல்வேறு பகுதிகளில் கழகத்தின் சார்பில், சுவர் விளம்பரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தோழர்கள் ஆத்தூர் மகேந்திரன், சென்னிமலை செல்வராசு ஆகியோர் சுவர் விளம்பரங்கள் தீட்டும் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். சென்னை, ஈரோடு, சேலம், திருப்பூர், பொள்ளாச்சி, சேலம் கிழக்கு, சேலம் மேற்கு என பல்வேறு மாவட்டங்களில் ஆர்ப்பாட்டத்திற்கு தயாராவதற்கான திட்டமிடல் பணிகளில் கழகத் தோழர்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். பேருந்துகள், தனியார் வாகனங்களில் தோழர்களை திரட்டி அழைத்து வருவதற்கான ஏற்பாடுகளைத் தொடங்கியுள்ளனர்.

ஏற்பாடுகள் ஒருபக்கம் தீவிரமடைந்து கொண்டிருக்க இந்த ஆர்ப்பாட்டம் ஏன் என்ற விவாதமும் எழத் தொடங்கியிருக்கிறது. ஆணவப் படுகொலைகளைத் தடுக்க தனிச்சட்டம் இயற்றப்படும் என தமிழ்நாடு அரசு அறிவித்துவிட்டது. இனி இந்த ஆர்ப்பாட்டம் தேவைதானா என்ற உரையாடலும் ஒருபக்கம் நடந்து கொண்டிருக்கிறது. ஆணவப் படுகொலைகளைத் தடுக்கக்கோரி தனிச்சட்டம் இயற்ற வேண்டுமென்ற ஒற்றை நோக்கத்திற்காக மட்டும் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்படவில்லை என்பதையும், ஏன் இந்த ஆர்ப்பாட்டம் தற்போது அவசியமாகிறது என்பதை விளக்க கழகம் கடமைப்பட்டுள்ளது.




ஒரு நூற்றாண்டுக்கு முன்பிருந்த ஜாதியப் படிநிலை இப்போது நிச்சயம் இல்லை. அக்ரகார அக்கிரமங்கள் உடைக்கப் பட்டிருக்கின்றன. கல்வி- வேலை வாய்ப்புகளை முழுவதுமாக பார்ப்பனர்கள் மட்டுமே ஆக்கிரமித்து வைத்திருந்த நிலைமை திராவிட இயக்கத்தின் சமூகப் பரப்புரைகள்- சட்ட திட்டங்களினால் தகர்க்கப்பட்டு, இன்று எல்லா சமூகத்தினரும் கல்வி கற்கும் உரிமை கிடைக்கப்பெற்றுள்ளது. திராவிட இயக்கத்தின் வழிவந்த அரசியல் கட்சிகளால் வேலைவாய்ப்பும் சாத்தியப்படுத்தப்பட்டுள்ளது. உயர் கல்வியில் தமிழ்நாடு இந்தியாவில் வேறெந்த மாநிலங்களும் தொட முடியாத உச்சம் பெற்றுள்ளது. தகவல் தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம், ரோபோடிக்ஸ் ஆராய்ச்சிப் பணிகள் வரை புதிய புதிய வேலைவாய்ப்புகளும் சாத்தியமாகி வருகின்றன.

கல்வியும் அதனூடாக கிடைக்கப்பெற்ற வேலைவாய்ப்புகளும் சமூகத்தின் அனைத்துப் பிரிவையும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சிக்கு வித்திட்டிருக்கின்றன. பொதுப்புழக்கத்தை, பொது உரிமையை சாத்தியப்படுத்தியுள்ளன. மற்றொருபக்கம் கிராமங்கள் கரைந்து நகரங்கள் பெருகியுள்ளன. தமிழ்நாட்டின் சரிபாதிக்கும் அதிகமானோர் நகரங்களில் வாழும் சூழலும் உருவாகியுள்ளது. இந்த வளர்ச்சி, மாற்றங்கள் அனைத்தும் ஜாதியத்தை கரைந்துபோகச் செய்து, மானுட சமத்துவத்தை அடையும் இலக்கில் பாய்ச்சலாக மாறியிருக்க வேண்டும். ஆனால் ஜாதியத்தின் பிடி தளர்ந்து விடாமல் இருக்கச்செய்யும் முயற்சிகளும் ஜாதியை நவீனப்படுத்தும் முயற்சிகளும் தொடர்ந்துகொண்டே இருக்கின்றன. ஜாதிகளுக்குள் ஏற்பட்டிருக்க வேண்டிய சமத்துவத்தை அடைய விடாமல் அம்முயற்சிகள் தடுத்துக்கொண்டே இருக்கின்றன. பள்ளிப்பருவத்தில் இருந்தே அத்தகைய முயற்சிகள் மூர்க்கத்தனமான நடந்து வருகின்றன. கல்வி நிலையங் களுக்குள் ஜாதியை அடையாளப்படுத்தும் கயிறுகளை மாணவர்களை அணியச் செய்கின்றனர். இடைநிலை ஜாதியைச் சேர்ந்த மாணவர்களும், ஒடுக்கப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த மாணவர்களும் ஒரே பள்ளியில் ஒன்றாகப் படித்தால் கூட, அவர்களை ஒன்றாக கலக்க விடாமல் செய்கின்ற நாசகர சிந்தனைகள் மாணவர்கள் மத்தியில் ஜாதி சங்கங்களால் விதைக்கப்படுகின்றன. நாங்குநேரியில் 12-ஆம் வகுப்பு மாணவன் சின்னத்துரை சக மாணவர்களால் தாக்கப்பட்ட கோரச்சம்பவம் இதை நமக்கு வெட்ட வெளிச்சமாக்கியது.

சமூக ஊடகங்கள், வாட்ஸ் ஆப் குழுக்கள் மூலம் ஜாதிக்கு ஒரு குழுக்களை வைத்துக்கொண்டு, ஆண்ட பரம்பரை என புகழ் பேசுகிற புதிய கலாச்சாரமும் உருவெடுத்திருக்கிறது. ஜாதிப் பெயரை ஒரு நூற்றாண்டுக்கு முன்பே விட்டொழித்துவிட்டு தமிழ்நாட்டில், சமூக ஊடகங்களில் பெயருக்குப் பின்னால் ஜாதியை அடையாளமாக சூட்டிக்கொள்கிற அவலம் தொடங்கி யிருக்கிறது. ஒருகாலத்தில் கல்வி- இடஒதுக்கீடு உரிமைகளை தங்கள் சமூகமும் பெற வேண்டுமென்று உழைத்த ஜாதிச் சங்கங்கள் புற்றீசல் போல, ஊருக்கு ஒரு சங்கம் முளைத்து சுயஜாதி வெறியை மட்டுமே பரப்பும் வேலைகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றன. படித்துவிட்டு வேலைகளுக்காகவும், வாழ்வியல் தேவைகளுக்காகவும் கிராமங்களை விட்டு நகரங்களுக்கு குடிபெயரும் இளைய தலைமுறை, தங்கள் துணையைத் தாங்களே தேர்ந்தெடுக் கொண்டால் அதற்கு பெற்றோர் சம்மதித்தாலும், ஜாதிச் சங்கங்கள் தலையிட்டு அவற்றைத் தடுக்கும் போக்குகளும் பெருகி வருகின்றன. அவை ஆணவக்கொலையில் முடிகின்ற அச்சப்போக்கையும் ஏற்படுத்தி வருகின்றன.

நெல்லையில் படித்த, நல்ல ஊதியம் பெற்றுவந்தவராக இருந்தாலும் கூட இளைஞர் கவின் ஒடுக்கப்பட்ட சமுகத்தைச் சேர்ந்தவர் என்ற ஒற்றை காரணத்திற்காக, அவர் காதலித்த இளம்பெண்ணின் குடும்பத்தினரால் (தந்தையும் தாயும் காவல்துறையில் பணியில் இருப்பவர்கள்) கொல்லப்பட்டார் என்பதைப் பார்த்தோம். இன்னொருபக்கம், ‘வள்ளி கும்மி’ என்ற பெயரில் இளம்பெண்களைக் கூட்டி வைத்து, ‘காதலிக்க மாட்டோம், அப்படியே காதலித்தாலும் சொந்த ஜாதியில்தான் காதலிப்போம்’ என பொதுவெளியில் சத்தியம் வாங்கி அவர்களைக் கூனிக்குறுகச் செய்யும் காணொலிகளைப் பரப்பிக் கொண்டிருக்கின்றன ஜாதிச்சங்கங்கள். குருபூஜை என்ற பெயரில் மறைந்த ஜாதிச்சங்க தலைவர்களின் பிறந்தநாள், இறந்தநாள்களில் இளைஞர்களை ஆயுதங்களோடு, சட்டம்- ஒழுங்கைக் கேலிக்கூத்தாக்கி, பொதுமக்களை அச்சுறுத்தும் வகையில் ஊர்வலம் செல்வதும், ஆபத்தான வகையில் வாகனங்களை இயக்குவதும் ஆண்டுக்கு ஆண்டு பெருகிக் கொண்டிருக்கிறது. சிவில் சமூக சிந்தனையில் இருந்து தமிழ்நாட்டை பின்னோக்கி இழுத்துக்கொண்டிருக்கின்றன இச்செயல்கள்.

வன்னியர் மேட்ரிமோனி, கவுண்டர் மேட்ரிமோனி, நாடார் மேட்ரிமோனி, செட்டியார் மேட்ரிமோனி என சுய ஜாதி வரன்கள் பார்த்துக் கொடுக்கும் திருமண நிலையங்கள் உருவாகி, தொலைக்காட்சிகளில், யூடியூப் சேனல்களில், வானொலிகளில் விளம்பரங்களை அள்ளிக்கொட்டுகின்றன. எந்தவித கட்டுப்பாடும் இல்லாமல், சமத்துவ சிந்தனை இல்லாமல் ஊடகங்களும் இவற்றை வெளியிடுகின்றன. ஒன்றிய- மாநில அரசுகளும் இவற்றை கட்டுப்படுத்த சிறு முயற்சியையும் எடுப்பதில்லை.

பேருந்தில் அமர்ந்து பயணிக்க அனுமதி மறுத்த காலமெல்லாம் மாறிவிட்டது என்று கருதினால், தாழ்த்தப்பட்டோர் வசிக்கும் பகுதிக்குள் பேருந்தையே இயக்காத நவீன ஜாதிவெறி கோவை மாவட்டம் கெம்பனூரில் முளைத்திருக்கிறது. கெம்பனூர்- காந்திபுரம் செல்லும் 21-ஆம் எண் நகரப்பேருந்து, அங்கிருந்து ஒரு கி.மீ. தொலைவுக்குள் உள்ள தாழ்த்தப்பட்டோர் வசிக்கும் அண்ணா நகருக்குச் செல்லாமல் கெம்பனூர் வரை மட்டுமே செல்கிறது. மற்ற சில பேருந்துகள் சென்றாலும் இந்த பேருந்து மட்டும், ஊர்த்தெருவில் வசிப்போரின் ஜாதிய மனநிலை காரணமாக கெம்பனூர் வரை மட்டுமே செல்கிறது. தமிழ்நாட்டில் தீண்டாமை நிலவும் கிராமங்கள் குறித்து திராவிடர் விடுதலைக் கழகம் கடந்த ஆண்டு நடத்திய கள ஆய்வில் இந்த உண்மை தெரிய வந்ததை அடுத்து, கழகத் தோழர்கள் தொடர்ந்து குரல் எழுப்பி வருகின்றனர். கோவை மாவட்ட ஆட்சியருக்கு பட்டியல் சமூகத்தினருக்கான தேசிய ஆணையம் நோட்டீஸ் அனுப்பியுள்ள நிலையில், மாநில ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆணையமும் இதுகுறித்து மாவட்ட நிர்வாகத்துக்கு இரு மாதங்களுக்கு முன்பே நோட்டீஸ் அனுப்பி விளக்கம் பெற்றுள்ளது. மாவட்டம் நிர்வாகமோ அங்கு ஜாதியச் சிக்கல் இல்லை என்று இவ்விவகாரத்தை மூடி மறைக்கவே முயல்கிறது. தீர்வுக்கு இதுவரை முன்வரவில்லை.

சைவ- வைணவக் கோயில்களில் அனைத்து ஜாதியினரும் இன்னும் முழுமையாக அர்ச்சகர்கள் ஆகவில்லை என்றாலும்கூட, வழிபடும் உரிமையாவது உள்ளது. ஆனால் அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் இருந்தாலும்கூட, கிராமப்புற கோயில்களில் தாழ்த்தப்பட்டோரை தடுத்தே வைத்திருக்கிற தீண்டாமைக் கொடுமைகள் இன்னும் அகலவில்லை. கிராமப்புற கோயில்களுக்குள்ளும் தங்களை அனுமதிக்கக் கோரி தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் தங்கள் சுயமரியாதைக்கான போராட்டங்களை நடத்தும் செய்திகளும் அவ்வப்போது வந்துகொண்டே இருக்கின்றன. அரசாங்கம் அனுமதித்தாலும் ஜாதிச்சங்கங்களும், இந்துத்துவா கும்பல்களும் மக்களைத் தூண்டிவிட்டு பிற்படுத்தப்பட்ட- தாழ்த்தப்பட்ட மக்களிடையே பெரும் பிளவை ஏற்படுத்திவிட முயல்கின்றன. தங்கள் ஜாதியை தக்கவைத்துக்கொள்ள, இத்தகைய சமத்துவப் போக்குகள் ஏற்படாமல் தடுப்பதில் மிகுந்த எச்சரிக்கையோடு செயல்படுகின்றன.

ஒட்டுமொத்தத்தில் நவீன உலகிலும் ஜாதியச் சிந்தனையை விட்டு மக்கள் வெளியேறிவிடாமல், ஜாதியப் படுநிலைக்கு கட்டுப்பட்டு நடந்துகொள்ள வேண்டியவர்களாக இருக்க வேண்டிய முயற்சிகளை ஜாதிச் சங்கங்களும் இந்துத்துவ கும்பல்களும் துணிச்சலோடு செய்து கொண்டிருக்கின்றன. இவற்றை மக்கள் மத்தியில் அம்பலப்படுத்தி, ஜாதி வெறி- ஆணவம் தலைதூக்க விடாமல் அதன் வாலை ஒட்ட நறுக்க வேண்டிய பொறுப்பு பெரியாரிய இயக்கங்களுக்கு உள்ளது. தேவைப்படும் இடங்களில் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய கடமை அரசுக்கும் உள்ளது. மக்களும் மனதளவில் ஜாதிய சிந்தனையில் இருந்து விடுபட்டு வெளியே வர வேண்டிய அவசியம் உள்ளது. இவற்றை விளக்குவதற்காகவே ‘மனிதம் நமது அடையாளம்- ஜாதி நமக்கு அவமானம்’ என்ற தலைப்பில் திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் தமிழ்நாடெங்கும் நூற்றுக்கணக்கான தெருமுனைப் பிரச்சாரங்களை நடத்திக் கொண்டிருக்கின்றனர். அதன் அடுத்தகட்டமாக மாநிலம் தழுவிய அளவில் இந்த புரிதலை மக்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்திற்காக, கோவையில் ஆர்ப்பாட்டத்தை நடத்துகிறது திராவிடர் விடுதலைக் கழகம். நவீன உலகிலும் தலைதூக்கும் ஜாதி ஆணவத்தை ஒட்ட நறுக்கி, சமத்துவத்தை விதைக்க அணி திரள்வோம் கோவையில்... வாருங்கள் தோழர்களே...

## ஈரோடு தமிழன்பனுக்கு புகழ்வணக்கம்!



திராவிட இயக்கக் கவிஞர் ஈரோடு தமிழன்பன் 22.11.2025 அன்று தனது 92ஆம் வயதில் காலமானார். புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களுடன் நெருங்கி பழகியவர் ஈரோடு தமிழன்பன். சீரிய பகுத்தறிவாளர். பொதிகை தொலைக்காட்சியில் செய்தி வாசிப்பாளராக பணியாற்றியதுடன், சென்னை புதுக்கல்லூரியில் தமிழ்த்துறைப் பேராசிரியர், தமிழ்நாடு அரசின் இயல் இசை நாடக மன்ற நிர்வாகக் குழு உறுப்பினர், அறிவியல் தமிழ் மன்ற உறுப்பினராகவும் இருந்துள்ளார்.

‘வணக்கம் வள்ளுவ’ என்னும் புகழ்பெற்ற கவிதை நூலுக்காக இந்திய அரசின் சாகித்திய அகாடெமி விருது, செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் வழங்கிய கலைஞர் மு.கருணாநிதி செம்மொழி விருது, வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கத்தின் ’உலகத் தமிழ்ப் பீட விருது’ உள்ளிட்ட பல விருதுகளைப் பெற்றவர். ஈரோடு தமிழன்பனின் இழப்பு தனிப்பட்ட அவருடைய குடும்பத்திற்கானது மட்டுமல்ல, ஒட்டுமொத்த திராவிட இயக்கத்திற்குமான பேரிழப்பு. கவிதைகள், இலக்கியத்தின் ஊடாக அவர் விட்டுச்சென்ற பெரியாரியல் பணியை, விதைத்துச் சென்ற சுயமரியாதைச் சிந்தனைகளை அடுத்த தலைமுறைக்கும் கடத்துவதே அவருக்கான நினைவஞ்சலி.

**ஈரோடு தமிழன்பன் கவிதையில் இருந்து...**

எல்லையற்ற இரக்கத்தின் திருஉருவம் பெரியார்! அவருடைய ஆத்திரம், போராட்டம், புரட்சி அனைத்துமே.

புதைகுழி விளிம்பிற்குத் தள்ளப்பட்ட தமிழ்மானுடனைக் காக்கத் துடித்த கருணையின் வெளிப்பாடே அன்றி,
வேறு என்ன?
பாலஸ்தீனத்தில் பிறந்திருந்தால்
அவர் யாசர் அராஃபத்துக்குத் தோளில்
துப்பாக்கி ஆகியிருப்பார்!
அல்லது தந்தை பெரியார் தோளில்
அராஃபத் துப்பாக்கியாகி இருப்பார்.

ஆப்பிரிக்காவில் பிறந்திருந்தால்
நெல்சன் மண்டேலாவின் சிறைக்குப்
பக்கத்துச் சிறையில்
விடுதலை வேள்வி செய்திருப்பார்
அல்லது அவருடைய சிறையிலிருந்தே
போராடி ஆப்பிரிக்காவையும்
அவரையும் விடுவித்திருப்பார்.

கருணை மறவர் பெரியார்
புலி தனது குட்டியைக் கவ்வுவதுபோலத்
தமிழர்களைக் கவ்வினார்.
பதிந்திருக்கலாம் பல்;
படிந்திருக்கலாம் சுவடு
தாய்ப்புலியின் பாதுகாப்பு நடவடிக்கை
அது! தப்புத் தமிழன்தான் தவறென்று
பேசுவான்.

வீடு, சொத்து, பதவி, சுகம்
எல்லாம் துறந்து வெட்டவெளி வீதியில்
நின்று தனது வயது, தளர்ச்சி, நோய்,
வலி எதையும் பொருட்படுத்தாது
தமிழனை மீட்கப் போராடிய பெரியாரை
முரட்டுச் சித்தர்கள் வழியில் வந்த
ஒரு பகுத்தறிவு மகரிசி என்றால்
இல்லை என்று எந்த விரல்
எதிர்ப்புக் காட்டி நீளும்?

ஆயிரம் பல்லாயிரம் கண்ணாடிகளாகித் தந்தை பெரியார் முகத்தைப் பிரதிபலித்துத் தமிழர்கள் அவருக்கு நன்றி சொல்லலாம்.

முகத்தைப் பிரதிபலிப்பதை நிறுத்திவிட்டு அவருடைய அகத்தைப் பிரதிபலித்தால் தமிழர்களுக்குத் தந்தை பெரியார் நன்றி சொல்வார்.

-ஈரோடு தமிழன்பன்

**தலையங்கம்**

# குழப்பத்தை விளைவிக்கும் உச்சநீதிமன்றம்!

தமிழ்நாடு அரசின் ‘10-க்கும் மேற்பட்ட மசோதக்களுக்கு ஒப்புதல் தராமல் ஆளுநர் காலம் தாழ்த்தியதை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில், “ஆளுநர் ஆர்.என். ரவியின் செயல், சட்டத்துக்கு எதிரானது. மசோதா மீது ஒரு மாதத்துக்குள் ஆளுநர் முடிவெடுக்க வேண்டும், மசோதாவை நிறுத்திவைப்பதாக இருந்தால், 3 மாதங்களுக்குள் அரசுக்குத் தெரிவிக்க வேண்டும், குடியரசுத் தலைவருக்கு அனுப்புவதாக இருந்தால் 3 மாதங்களுக்குள் செயல்படுத்த வேண்டும், மறுபரிசீலனை செய்வதற்காக மசோதா திருப்பி அனுப்பப்பட்டால் ஒரு மாதத்துக்குள் ஆளுநர் ஒப்புதல் வழங்க வேண்டும். எதுவுமே செய்யாமல் மசோதாக்களைக் கிடப்பில் போட்டு வைத்திருக்க ஆளுநருக்கு எவ்வித தனி அதிகாரமும் (வீட்டோ) கிடையாது” என்று உச்சநீதிமன்ற நீதிபதிகள் ஜே.பி. பார்திவாலா, ஆர். மகாதேவன் அமர்வு இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை வழங்கியிருந்தது.

இந்தத் தீர்ப்பு தொடர்பாக, உரிய காலக்கெடு தாண்டிய பிறகு, திடீரென 14 கேள்விகளை எழுப்பி, விளக்கம் கேட்டு உச்ச நீதிமன்றத்துக்குக் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார். உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய் ஓய்வுபெறுவதற்கு முந்தைய நாள், நீதிபதிகள் சூர்யகாந்த், விக்ரம்நாத், பி.எஸ். நரசிம்மா, அதுல் எஸ். சந்துர்கர் ஆகியோரைக் கொண்ட அரசியல் சாசன அமர்வு குடியரசுத் தலைவரின் கேள்விக்கு ஒருமனதாக பதில் அனுப்பியுள்ளது. தமிழ்நாடு அரசு வழக்கில் அளித்த தீர்ப்புக்கு முற்றிலும் நேர் முரணாக இந்த பதில் அளிக்கப்பட்டிருப்பது பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ‘ஆளுநரின் முடிவு நீதித்துறைக்கு உள்பட்டதல்ல; அதில் நீதிமன்றம் தலையிடாது, காரணமின்றி, எந்த முடிவும் எடுக்கப்படாமல் கிடப்பில் வைத்திருந்தால் அதை நீதிமன்ற ஆய்வுக்குட்படுத்தி தேவைப்பட்டால் ஆளுநர்களுக்கு அந்தவொரு விஷயத்தில் வரையறுக்கப்பட்ட உத்தரவைப் பிறப்பிக்க முடியும்; ஆனாலும் அனைத்து வழக்குகளிலும் நீதிமன்றம் அத்தகைய உத்தரவுகளைப் பிறப்பிக்காது; அது அந்தந்த சூழ்நிலைகளைப் பொருத்தது’ என்று தனது தீர்ப்பில் இருந்து அப்படியே பல்டி அடித்திருக்கிறது உச்சநீதிமன்றம்.

அரசமைப்பின் 142-வது பிரிவைப் பயன்படுத்தி, ஆளுநர் கிடப்பில் மசோதாக்களுக்கு உச்சநீதிமன்றம் அனுமதி வழங்குகிறது என தீர்ப்பில் கூறியிருந்த நிலையில், தாமதப்படுத்தப்பட்ட மசோதாக்களை ஒப்புதல் அளிக்கப்பட்டதாகக் கருத, அரசமைப்பின் 142-வது பிரிவின் கீழுள்ள அதிகாரத்தின்படி உச்ச நீதிமன்றம் ஒப்புதல் வழங்கலாகாது என்றும் இப்போது 111 பக்க கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆக, எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளை மீறி, ஆளுநர்கள் தான்தோன்றித்தனமாக செயல்படலாம், அதற்கு எந்த வரையறையும் இல்லை என்பதை உச்சநீதிமன்றம் இந்தக் கடிதத்தின் மூலம் தெளிவுபடுத்தியிருக்கிறது. மேலும், இது தீர்ப்பு இல்லை, ஏற்கெனவே வழங்கப்பட்ட தீர்ப்பை எவ்விதத்திலும் பாதிக்காது என்றாலும் கூட, எதிர்காலத்தில் இதுபோன்ற வழக்குகளில், அரசியல் சாசன அமர்வின் இந்த கடிதத்தை முன்னுதாரணமாகக் கொண்டு உச்சநீதிமன்றம் மோசமான தீர்ப்புகளை வழங்கலாம் என்ற அச்சத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது.

குடியரசுத் தலைவரின் கேள்விகளுக்கு விளக்கம் அளிக்கத் தேவையில்லை நிராகரிக்க வேண்டும் என்று தமிழ்நாடு, மேற்கு வங்கம், கேரளம், கர்நாடகம், தெலங்கானா மாநில அரசுகள் வலியுறுத்தியும் இதை கடமையாக எடுத்துக்கொண்டு, இத்தகைய பதில் கடிதத்தை அனுப்ப வேண்டிய அவசியம் உச்சநீதிமன்றத்திற்கு என்ன வந்தது என்பதே நமது கேள்வி. ஏனெனில் அரசமைப்புச் சட்டப்படி ஆளுநர் என்பவர் ஒரு நியமனப் பதவியாளர். ஆனால் நடைமுறையில் அவர்கள் ஒன்றிய அரசின் பிரதிநிதிகளாகத்தான் நடந்துகொள்கிறார்கள்.


ஒரு நியமன அதிகாரியாய் உள்ள ஆளுநர், தன்னிச்சையாக மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்காமல் தாமதிப்பதன் மூலம் அல்லது அவற்றை குடியரசுத் தலைவருக்கு அனுப்பி, அவர் அவற்றை காலவரையின்றி நீட்டிக்க அனுமதிப்பதன் மூலம், மக்கள் தேர்ந்தெடுத்த மாநில அரசின் செயல்பாட்டை முடக்க முடிகிறது.

மாநிலப் பட்டியலுக்குள் வரும் சட்டங்களுக்கும் அல்லது ஒத்திசைவு பட்டியலில் வரும் சட்டங்களுக்கும் கூட ஆளுநர் இவ்வாறு தடங்கல் விளைவிக்கின்றார் என்றால் கூட்டாட்சி என்பதே அர்த்தமற்றதாகிறது. மாநில அரசுகள் செயலற்றதாகின்றன.

அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 200-இல் குறிப்பிடப்பட்டுள்ள “as soon as possible” என்ற சொற்றொடர், மாநில மசோதாக்கள் மீது ஆளுநர் ‘நியாயமான காலத்திற்குள்’ முடிவெடுக்க வேண்டும் என்ற பொருளைத் தருகிறது. ஆனால் அது எவ்வளவு காலம் என்ற தெளிவு இல்லை. அந்தத் தெளிவை வரையறுக்கும் விதமாக உச்சநீதிமன்றத் தீர்ப்பு இருந்தது. அரசமைப்புச் சட்டத்தை வலுப்படுத்துவதாகவும் அது இருந்தது. ஆனால் உச்சநீதிமன்றம் தற்போது அடித்திருக்கும் பல்டி, நீதித்துறையின் செயல்பாடுகள் சுதந்திரத்தன்மையோடுதான் உள்ளனவா என்ற சந்தேகத்தை வரவைக்கிறது. ‘நிர்வாகம் பலவீனமாக இருக்கும்போது மட்டுமே நீதிமன்றம் தன் சக்தியை வெளிப்படுத்துகிறது. ஒரு வலுவான அல்லது ஆதிக்க மனப்பான்மை கொண்ட நிர்வாகத்தின் முன்னிலையில் நீதிமன்றம் சரணடைகிறது’ என்ற How Democracies Die என்ற நூலின் கருத்தை மெய்ப்பிக்கும் விதமாக இருக்கிறது உச்சநீதிமன்றத்தின் இந்த பதில் கடிதம். இந்திய ஜனநாயகத்தை வலுவிழக்கச் செய்து, கூட்டாட்சிக்கு கேடு விளைவிக்கக்கூடிய இந்த மோசமான கருத்தை உச்சநீதிமன்றம் மறுபரிசீலனை செய்து திரும்பப் பெற வேண்டும்.

# குலுங்கிய கைகள்

*புட்டபர்த்தி சாய்பாபா நூற்றாண்டு விழாவில் மோடியை மேடையில் வைத்துக் கொண்டே நடிகை ஐஸ்வர்யா ராய் வெளுத்து வாங்கி விட்டார்.*



*உலகின் ஒரே மதம் அன்பு; ஒரே மொழி அன்பின் மொழி ஒரே கடவுள் -உலகம் முழுதும் நிறைந்துள்ள சக்தி என்று பேசியதோடு உரையை முடிக்கும் முன் நக்கலாக ஓர் பஞ்ச் வைத்தார்"ஜெய் ராம்; ஜெய்ஹிந்த்"*

*மோடியின் முகம் செத்து கிடந்தது.*

*அடுத்த நாள் தென்னாப்பிரிக்காவில் நடந்த சர்வதேச மாநாட்டில் ஆஸ்திரேலியா நாட்டு பிரதமரை மோடி சந்தித்து உடன்பாடுகளை செய்து கொண்டார் என்ற செய்தி வந்தது.*

*ஆஸ்திரேலியாவில் இப்போது தொழிலாளர் கட்சியின் ஆட்சி நடக்கிறது. பல்வேறு நாடுகளில் இருந்து வந்து குடியேறியவர்களின் தேசம். கூட்டாட்சி அரசாங்கம் நடக்கிறது. அனைத்து இனங்களுக்கும் சம உரிமை, தெற்கு ஆஸ்திரேலியாவின் தலைநகரான அடிலாய்டு நகரில் கடந்த 14ஆம் தேதி கலாச்சாரங்களின் திருவிழா ஒன்று அரசு சார்பில் நடத்தப்பட்டது.*

*இது ஆண்டுதோறும் நடக்கும் விழா. ஒவ்வொரு தேசிய இன மக்களும் ஒன்று கூடுகிறார்கள். அவர்களின் கலை நிகழ்ச்சிகள் பொதுவெளியில் அரங்கேற்றப்படுகின்றன. அவரவர் உணவுகள் விற்பனைக்கு தனி அரங்குகளை அரசே அமைத்துத் தருகிறது. அதற்கான கட்டணத்தையும் அரசே வழங்குகிறது. கலை நிகழ்வுகளில் பங்கேற்கும் குழுவினருக்கும் அரசு நிதி வழங்குகிறது.*

*அடிலெய்டு தமிழ்ச் சங்கம் தமிழர்களின் அடையாளமான பறை இசையுடன் தமிழ் மாணவ மாணவிகள் நிகழ்த்திய கலை நிகழ்ச்சி மெய்சிலிர்க்க வைத்தது. தமிழர் உணவு அரங்கில் தோசை, இட்லியுடன் மாட்டுக்கறியையும் இணைத்தது மிகச் சிறப்பு.*

*சங்கத்தின் முக்கிய பொறுப்பாளர்கள் கருப்பு சீருடையுடன் வந்திருந்தார்கள். பல்வேறு இனங்கள் நடத்தும் கலை நிகழ்ச்சிகளுக்கு அரசு உதவித்தொகை வழங்குவதோடு, ஆஸ்திரேலியா நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்கிறார்கள். எஸ்.ஐ.ஆர் போன்ற கெடுபிடிகளோ மதத் திணிப்புகளோ இல்லாத ஒரு தேசம் ஆஸ்திரேலியா.*

*வேட்பாளர்கள் விரும்புகிற கட்சிக்கு ஒரு வாக்கு, விரும்புகிற வாக்காளர்களுக்கு ஒரு வாக்கு என்று தனித்தனியாக வாக்களிக்கலாம். வாக்களிப்பு 10 நாட்கள் வரை நீடிக்கும். சர்ச்சுகளும் வாக்குச்சாவடிகளாக பயன்படுத்தப்படுகின்றன. நேரில் சென்று தான் வாக்களிக்க வேண்டும். காகித வாக்களிப்பு தான். வாக்கு எந்திரங்கள் கிடையாது. ஆனால் வாக்களிப்பது கட்டாயம் வாக்களிக்காவிட்டால் அபராதம்.*

*முக்கிய சட்ட திருத்தங்களுக்கு மக்களிடம் பொது வாக்கெடுப்பு நடத்தப்படுகிறது. தமிழ்ப் பள்ளிகளுக்கு அரசு நிதி உதவி வழங்குகிறது. பள்ளிகள் நீதிமன்றங்கள் அரசு அலுவலகங்களில் மதத் திணிப்புகள் கிடையாது. நாடாளுமன்ற கூட்டங்கள் தொடங்கும் போது மட்டும் கிறிஸ்தவ மதப் பாடல்கள் பாடப்படுகின்றன.*

*பூர்வீக குடிகளுக்கு அரசு ஏராளமான சலுகைகளை வாரி வழங்கினாலும், அவர்களுடைய சமூக மாற்றத்திற்கு போராடக்கூடிய பெரியாரோ அம்பேத்கரோ இங்கு பிறக்கவில்லை. பூர்வீக குடிகளுக்கு அரசு சூட்டியுள்ள பெயர் "First Nation" இந்தப் பெயரிலேயே அழைக்க வேண்டும் என்று பள்ளிகளிலேயே பயிற்சி அளிக்கப்படுகிறது.*

*40 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இந்த மண்ணில் வாழ்ந்தவர்கள் பூர்வ குடிகள். இவர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கும் அநீதிகளுக்கும் ஆஸ்திரேலியா அரசாங்கம் இரண்டு முறை மன்னிப்பு கேட்டு இருக்கிறது.*

*பாகுபாடுகளை நியாயப்படுத்தும் பார்ப்பனியம் முற்றாக இல்லை. சமத்துவ நாகரிக விழுமியங்களுடன் வாழும் இந்த நாட்டையும் பார்ப்பனியம் விட்டு வைக்க விரும்பவில்லை.*

*அரசு நடத்திய கலாச்சாரங்களின் விழாவில் முதன்முறையாக விசுவ இந்து பரிசத் நுழைந்து தனது அரங்கை அமைத்து இருந்தது. கிருஷ்ண பகவான் பெயரில் அமைக்கப்பட்ட ஒரு அரங்கில் சனாதன வாழ்வின் பெருமைகளை விளம்பரப்படுத்திக் கொண்டிருந்தனர். மோடியும் ஆஸ்திரேலியா பிரதமரும் தென்னாப்பிரிக்காவில் கைகுலுக்கினாலும்; அந்த கைகளில் ஒன்று மத வெறியாகவும் மற்றொன்று மனித நேயமாகவும் இருந்தது என்பதே உண்மை.*

***விடுதலை இராசேந்திரன்***
***25.11.2025.***

# கழக ஏட்டுக்கு நன்கொடை

தமிழ்நாடு அறிவியல் மன்ற நிர்வாகிகளான ஆசிரியர்கள் சிவகாமி, ஆசிரியர் சிவகுமார் (ஈரோடு) ஆகியோர் முன்னெடுப்பில் பெரியார் முழக்கம் வளர்ச்சிக் குழு உருவாக்கப்பட்டு, பல்வேறு தோழர்கள் மாதம்தோறும் தலா ரூ.500 வழங்கி வருகிறார்கள்.

அவர்களின் பெயர் பட்டியல்: தலைமைக் குழு உறுப்பினர்கள் அன்பு தனசேகர், இளையராஜா, துரை. தாமோதரன், தோழர்கள் நாத்திக ஜோதி (ஈரோடு), முத்து (திருப்பூர்), சண்முகசுந்தரம் (மயிலாடுதுறை), பிரபாகரன் (மேட்டூர்), பிரபாகரன் (பவானிசாகர்), ஜோதி (மடத்துக்குளம்), சாக்கோட்டை இளங்கோவன், அஜீத் (மேட்டூர்), அறிவழகன் (கடலூர்), வீரமணி, முத்து (சத்தியமங்கலம்), சுந்தரம் (பவானி), தினேஷ், சந்தோஷ், அறிவழகன், மலைக் கொழுந்தன், வெங்கட், வீரன், கோபிநாத், வடிவேல் ராமசாமி, சௌந்தர்யன், சரவணகுமார், மதன், மகேஷ், பழனிச்சாமி கோபி, அழகர் பிரபாகரன், ஆனந்த், மாதவன், இளங்கோ, ரவி, கோடி சுந்தரம்.

ஓராண்டு செயல்திட்டமாக இதை செயல்படுத்தி வருகின்றனர். நவம்பர் மாத நன்கொடையாக ரூ.15,500 வழங்கியுள்ளனர். நன்றியுடன் பெற்றுக் கொண்டோம் (ஆசிரியர்).

*கழகத் தலைமை அலுவலகத்துக்கு வளர்ச்சி நிதியாக தோழர்கள் தலைமைக் குழு உறுப்பினர் அன்பு தனசேகர் அவரின் மகள்கள் தமிழ்செல்வி, வழக்கறிஞர்கள் நாத்திகராணி இணந்து மாதம் ரூ.1000, அஜித், சேத்துப்பட்டு இராசேந்திரன், இரண்யா ஆகியோர் தலா மாதம் ரூ.1000 தலைமை அலுவலக பாரமரிப்புக்கு செலவுகளுக்கு நன்கொடை அளித்து வருகின்றனர். இளையராசா ரூ.5000 ஐந்து மாதங்களுக்கு சேர்த்து தந்துள்ளார்.*

# தமிழர் இயக்கம் உருவானதன் பின்னணி!

## ஜீவாவின் பெரியார் மீதான விமர்சனம் (5)

- கொளத்தூர் மணி

"ஈரோட்டுப் பாதை சரியா?" நூலில் ஜீவா அவர்கள் பெரியார் மீது வைத்துள்ள விமர்சனங்களைப் பார்ப்போம்.

**ஈரோட்டுப் பாதையின் 20 ஆண்டுகள்** என்ற தலைப்பில், "இன்று ஈரோட்டுப் பாதை திராவிடர் கழகம் என்று அழைக்கப்படுகிறது. ஆரம்பித்த பொழுது இதற்கு இந்தப் பெயர் இல்லை; கூடு விட்டு கூடு பாய்வதைப் பாய்வது போல பல பெயர்களைத் தாங்கி ஈரோட்டுப் பாதை 20 ஆண்டுகளைக் கழித்து இருக்கிறது. பார்ப்பனரல்லாதார் இயக்கம், சமூகச் சீர்திருத்த இயக்கம், சுயமரியாதை இயக்கம், பகுத்தறிவு இயக்கம், சமதர்ம நாஸ்திக இயக்கம், தமிழர் இயக்கம், திராவிடர் இயக்கம் என்ற பல பெயர்களோடு பாதை காட்டி வந்திருக்கிறார் தன்னைப் பின்பற்றிய தமிழ் மக்களுக்கு ஈரோட்டுப் பெரியார்" என்று எழுதியுள்ளார் ஜீவா.

மாற்றம் ஒன்றே மாறாதது என்பது மார்க்சியர்கள் அடிக்கடி பயன்படுத்தும் ஒரு சொற்றொடர் ஆகும். வரலாற்றின் தொடக்கத்தில் கிரேக்க தத்துவஞானி ஹிராகிளிடஸ் சொல்லியிருந்தாலும், நவீன வரலாற்றில் பேராசான் மார்க்சும் இதனைச் சொல்லி உள்ளார்.

ஆனால் ஜீவாவோ கூடுவிட்டு கூடு பாய்வது போல பல பெயர்களைத் தாங்கி ஈரோட்டுப்பாதை 20 ஆண்டுகளைக் கழித்து இருக்கிறது என்று பெரியாரை விமர்சிக்கிறார். ஆனால் தானும் சுயமரியாதை இயக்கம், காங்கிரஸ், சுயமரியாதை சமதர்மக் கட்சி, காங்கிரஸ் சோஷலிஸ்ட், கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய பெயர்களைத் தாங்கி இருந்திருக்கிறோம் என்பதை எப்படியோ மறந்துவிட்டு இதனை எழுதி இருக்கிறார்.

ஈ.வெ.ரா. இந்தி எதிர்ப்பில் சிறைசென்றபோதும் நீதிமன்றத்தில் அளித்த வாக்குமூலத்தில் "சுயமரியாதை இயக்கமும் தமிழர் இயக்கமும், இந்தி எதிர்ப்பு கிளர்ச்சியும், ஜஸ்டிஸ் இயக்கமும்" ஒன்று என்றே குறிப்பிடுகின்றார் என்று அதே நூலில் எள்ளல் தொனியிலும் குறிப்பிட்டு இருக்கிறார்.

இந்த வாய்ப்பிலாவது சில வரலாற்றுச் செய்திகளைக் குறிப்பிடுவது தேவை என எண்ணுகிறோம்.

### சேரன்மாதேவியில் நடந்தது என்ன?

பெரியார் காங்கிரஸ்காரராக இருந்தபோதே வைக்கம் போராட்டம் நடந்தது. தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக அப்போது பெரியார் விளங்கினார். பெரியார் காஞ்சிபுரம் மாநாட்டில் இருந்து வெளியேறியது 22.11.1925 ஆகும். அதற்கும் ஏழு நாட்களுக்குப் பின்னர் 29.11.1925-இல் வைக்கத்தில் நடைபெற்ற வைக்கம் வெற்றி விழாக் கூட்டத்துக்குத் தலைமை ஏற்று நடத்தியுள்ளார்.

சேரன்மாதேவி குருகுலப்பள்ளி பெரிதும் 'பரத்வாஜர் ஆசிரமப் பள்ளி'யாக பலராலும் குறிப்பிடப்படுகிறது. ஆனால் அக்குருகுலப்பள்ளி 'தமிழ்க் குருகுல வித்தியாலயம்' என்றுதான் பெயரிடப்பட்டிருந்தது.

பார்ப்பன - பார்ப்பனரல்லாத மாணவர்களை தனித்தனியே அமர வைத்து உணவு பரிமாறப்படுகிறது; கடவுள் வணக்கம் கூட பார்ப்பன மாணவர்கள் சமஸ்கிருத ஸ்லோகங்களையும் பார்ப்பனரல்லாத மாணவர்கள் தேவாரம் திருவாசகம் போன்ற தமிழ்ப் பாடல்களையும் பாடுவது போன்ற பாகுபாடுகள் கடைபிடிக்கப்படுகின்றன என்ற செய்திகளே போராட்டத்திற்கு மூலக் காரணமாகியது.

### வரதராஜுலு நாயுடுவின் எதிர்ப்பு!

'லட்சுமி' எனும் இதழின் 1924 அக்டோபர் மாத இதழில் "காந்தியின் சத்தியாகிரக ஆசிரமம், சிரத்தானந்தாவின் காங்கிரி குருகுலம், ரவீந்திர நாதரின் சாந்தி நிகேதனம் போல வித்தியாசம் இன்றி குருகுலம் நடத்த வேண்டும். சமபந்தி போஜனம், சமமான கல்வி முதலியவை கொடுத்து சம திருஷ்டியுடன் நடத்தத் தயாராக இருப்பதாக ஐயர் அறிவித்தாலன்றி குருகுலத்திற்குப் பொருள் உதவி செய்யக்கூடாது என்று பிராமணர் அல்லாதவரை கேட்டுக்கொள்கிறேன்" என்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் பொதுச் செயலாளர் வரதராஜுலு நாயுடு அவர்களின் அறிக்கை குருகுலப் போராட்டத்தின் தொடக்கம் ஆயிற்று.

சேரன்மாதேவி குருகுலம் ஏற்படுத்தத் தேவையான 30 ஏக்கர் நிலத்தை வாங்கிக் கொடுத்தவரும், பின்னாளில் சுயமரியாதை இயக்கத்தின் பொருளாளராக இருந்தவருமான வை.சு. சண்முகம் அவர்கள் குருகுலம் சென்று வ.வே.சு ஐயரிடம் பேசிய பின்னர் 17.12.1924 அன்று 'குமரன்' இதழில் ஓர் அறிக்கையை வெளியிட்டார். அதில் "பெல்காமில் கூடவிருக்கிற அகில இந்திய காங்கிரஸ் மகாசபை கூட்டத்திற்கு இரண்டு மாதங்களுக்குள் குருகுலத்தில் பேதமற்ற நடைமுறைகளையும் நிர்வாக சம்பந்தமான கூட்டம் முதலிய சீர்திருத்தங்களையும் ஏற்படுத்தி விடுதல் கூடும் என ஐயர் அவர்கள் சொன்னார்கள்" என்று அதில் குறிப்பிடப்பட்டிருந்தது

> **கூடுவிட்டு கூடு பாய்வது போல பல பெயர்களைத் தாங்கி ஈரோட்டுப்பாதை 20 ஆண்டுகளைக் கழித்து இருக்கிறது என்று பெரியாரை விமர்சிக்கிறார் ஜீவா. ஆனால் தானும் சுயமரியாதை இயக்கம், காங்கிரஸ், சுயமரியாதை சமதர்மக் கட்சி, காங்கிரஸ் சோஷலிஸ்ட், கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய பெயர்களைத் தாங்கி இருந்திருக்கிறோம் என்பதை எப்படியோ மறந்துவிட்டு இதனை எழுதி இருக்கிறார்.**

காந்தியாரும் கலந்து கொண்ட ஒரு சமாதானக் கூட்டத்தில் "புரவலர்களின் விருப்பப்படி நீங்கள் நடக்க மறுத்தால் அவர்களுடைய பணத்தைத் திருப்பி கொடுத்துவிடுவது ஒழுங்கு" என்று காந்தியார் பேச்சுவார்த்தையின் இறுதியில் குறிப்பிட்டார். இக்கருத்தை வ.வே.சு ஐயர் ஒப்புக்கொள்ளவில்லை.

தமிழ் குருகுல விஷயமாக காந்தியுடன் இருதரப்பாரும் கலந்து பேசியும் ஒரு முடிவுக்கு வர முடியாததாலும், இனி தமிழர்கள் சமத்துவமாக நடத்தப் பெறுவார்கள் என்று நம்புவதற்கு இடம் இல்லை என்று கருதியதாலும் காந்தியுடன் பேசிய 1925 மார்ச் 24 அன்று மாலையே சென்னையில் வரதராஜுலு நாயுடு அவர்களின் 'தமிழ்நாடு' இதழ் அலுவலகத்தில் வை.சு. சண்முகம் தலைமையில் **'தமிழர் கூட்டம்'** கூடியது. இதில் பிரச்சனையின் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து விவாதித்தனர். இக்கூட்டத்திற்குப் பிறகு பார்ப்பனரல்லாதார், பிராமணரல்லாதார் என்று சொல்லாட்சிகள் கைவிடப்பெற்று **'தமிழர்' என்ற பதமே** பத்திரிகைகளில் இடம் பெறலாயிற்று என்கிறார் ஆய்வாளர் பழ.அதியமான்.

**"தமிழர் கூட்டம்"** கூடிய பிறகும் நிலைமை சீர்படவில்லை. பணம் கொடுத்தோர் அதைத் திருப்பக் கோரிய கோரிக்கைகள் பயனற்றுப் போயின. இந்நிலையில் வராராஜுலு கடுமையான நடவடிக்கை ஒன்றை எடுத்தார். "காங்கிரஸ் கமிட்டியிடம் இருந்து பெற்ற பணத்தை 1925 ஏப்ரல் மாதம் முடிவுக்குள் திருப்பிக் கொடுக்காவிட்டால் மே மாத தொடக்கத்தில் குருகுலம் முன்னால் சத்தியாகிரகம் நடைபெறும் என்றும், வேறு ஒரு தமிழ்க் குருகுலம் ஆரம்பிக்கப்படும்" எனவும் அறிவித்தார். இந்த செய்திகள் "குமரன், தி இந்து" நாளேடுகளில் வெளிவந்திருக்கின்றன.

அதற்கு எதிர்வினையாக வ.வே.சு. அய்யர் "தமிழ்க் குருகுல சொத்துக்கள் என்னுடையவாக இருந்தால் பணத்தைத் திருப்பி கொடுத்து விட நான் சற்றும் தயங்க மாட்டேன். பொது ஸ்தாபனமாகிய குருகுலத்தின் தர்மகர்த்தா என்ற முறையில் அது முடியாது" என்று 15.4.1925-இல் பதில் அளித்தார்

அடுத்த நாளே வரதராஜுலு "பணத்தைத் திருப்பிக் கொடுக்க மறுப்பது பிடிவாதமான துராக்கிரகமாகும். குருகுல சொத்து அவர் (வ.வே.சு. அய்யர்) பெயரிலேயே இருக்கிறது; டிரஸ்டிகள் பெயரால் இல்லை" என்று பதில் அறிக்கையை கொடுக்கிறார். இந்து முன்னணியின் நிறுவனர் வீரத்(?)துறவி இராமகோபாலன் இந்து முன்னணியின் நிதியை தன்னுடன் மனைவி, பிள்ளைகளைச் சேர்த்து அறக்கட்டளை உருவாக்கி இந்து முன்னணியின் நிதிகள் அறக்கட்டளையாக உள்ளது என்றாராமே, அதுதான் இப்போது நினைவுக்கு வருகிறது.

### தமிழர் இயக்கத்தின் தொடக்கம்!

1925 மார்ச்சில் உருவான தமிழர் கூட்டங்கள் தொடர்ந்து ஏப்ரல், மே, ஜூன், நவம்பர் மாதங்களில் கூடிய விவரங்கள் அப்போதைய ஏடுகளில் காணக் கிடைக்கின்றன. "இக்கூட்டம் **தமிழர் இயக்கமாக** மாறி தமிழ்நாட்டிற்கு தொண்டாற்ற வேண்டும்" என்று 'குமரன்' இதழும் 'லட்சுமி' இதழும் வரவேற்றுப் பாராட்டி எழுதின.

'லட்சுமி' இதழ் பல யோசனைகளையும் குறிப்பிட்டு எழுதியது; தமிழர் இயக்கத்துக்கு சென்னையைத் தலைமையிடமாகக் கொள்வது, கிராமங்கள் தோறும் அதன் கிளைகளை நிறுவுவது, திரு.வி.க.வைத் துணைக்கு வைத்துக் கொள்வது, ஜஸ்டிஸ் கட்சியை இதனோடு இணைத்து விடுவது என்பது ஒன்று.

அடுத்ததாக தமிழர் ஒற்றுமை, பிராமணரையும் சகோதரராகப் பாவிப்பது, சர்வ சமய ஒற்றுமை, கோயில் நுழைவு போன்ற அடிப்படையான வேலைகளைத் திட்டமிட்டு நடத்துவது என்பதான யோசனைகளை எழுதியுள்ளது.

'குமரன்' இதழோ "இதுகாலை இருந்து வருகிற பிராமணரல்லாத இயக்கமானது முறுகி எழுவதற்கு காலம் சமீபித்து விட்டது என்பதற்கு குருகுல சம்பந்தமான நிகழ்ச்சிகள் சான்று கூறுகின்றன. ஆனால் இவ்வியக்கம் தமிழ் மொழியை ஆதாரமாகக் கொண்டு நிகழ்தல் வேண்டும்; **தமிழர் இயக்கம்** என்ற பெயர் கொண்டு திகழ்தலே உண்மையான பயனை அளிக்கும்; இவ்வியக்கமானது உரம் பெற்று வளர்வதற்கு பல வகை இயக்கங்களில் தலைப்பட்டு இருக்கிற எல்லாத் தமிழரும் ஒன்றாக கலந்து வேலை செய்ய முயல வேண்டுவது இன்றியமையாததாகும்" என்று எழுதியுள்ளது.

இதனிடையில் சேலம் விக்டோரியா மார்க்கெட்டில் ஆதிநாராயண செட்டியார் தலைமையில் பொதுக்கூட்டம் ஒன்று 1925 ஏப்ரல் 13 அன்று நடைபெற்றது. வரதராஜுலு, பெரியார், எம்.ஜி. நடேசன் செட்டியார் ஆகியோர் பேசினர்.

### பிராமணர் பிரச்சனைக்குத் தீர்வு வேண்டும்!

பெரியார், "வரதராஜுலுவுடன் அரசியல் விவகாரங்களில் பல கருத்து வேறுபாடுகள் இருப்பினும் இந்த குருகுல விஷயத்தில் நாங்கள் ஒன்றாகவே இருக்கிறோம். பிரிட்டிஷ் அரசு இங்கு இருக்கும்போதே பிராமணர் பிரச்சனைக்குத் தீர்வு கண்டாக வேண்டும். இல்லையெனில் பிராமண நாயகத்தின் (Brahmanocracy) பெருந்துன்பத்தில் அல்லல்படுவோம்" என்று பேசியது இந்த கூட்டத்தில்தான்.

*[ "E.V.Ramasamy Naicker said "they must settle the Brahmin question even while the British supremacy lasted, otherwise they would have to suffer under the tyranny of what he called 'Brahmanocracy' - The Hindu 15.4.1925]*

இந்நிலையில் வ.வே.சு. ஐயர் 1925-ஆம் ஆண்டு ஜூன் மாதம் மூன்றாம் தேதி அருவிச் சுழலில் சிக்கி தன் மகள் சுபத்ராவோடு மரணம் அடைந்தார். 15 நாட்கள் கழித்து 1925 ஜூன் 18-ஆம் நாள் கானாடுகாத்தானில் **தமிழர் நிர்வாகக் கமிட்டி** கூட்டம் வை.சு. சண்முகம் அவர்கள் வீட்டில் நடக்கிறது. அக்கூட்டத்தில் ஆர்.கே. சண்முகம் செட்டியார் தவிர மற்ற உறுப்பினர்கள் பெரியார், எஸ் ராமநாதன், சுரேந்திரநாத் ஆரியா என யாவரும் கலந்து கொண்டனர்.

அதில் பல தீர்மானங்கள்கள் இயற்றப்பட்டன.

அவற்றில் ஐந்தாவது தீர்மானம்: பிறவியினால் உயர்வு தாழ்வு இல்லை என்பதை துண்டு பிரசுரங்கள் மூலம் தேசமெங்கும் பிரசங்கம் நடத்துவது; சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் போன்ற உணர்ச்சிகளை வளர்க்க ரூ.5000 செலவிடுவது

ஆறாவது தீர்மானம்: எல்லா கட்சியாரும் சேர்ந்த பிராமணரல்லாதார் மாநாடு ஒன்றை விரைவில் கூட்டி குருகுல விவாதத்தினால் நாட்டில் ஏற்பட்டிருக்கும் நிலைமையைப் பரிசீலனை செய்து மேலே நடக்க வேண்டியதை முடிவு செய்வது. இதற்கு எஸ்.இராமநாதன் செயலாளர்.

ஐந்தாவது தீர்மானத்தின்படி ஏற்பட்ட சமத்துவ பிரச்சார நிதிக்கு பெரியார், வரதராஜுலு, வை.சு.சண்முகம் ஆகியோர் தலைக்கு ரூபாய் 100; காசி விஸ்வநாதன், ராய சொக்கலிங்கம் ஆகியோர் தலைக்கு ரூபாய் 50-ஆம் சொ.முருகப்பா ரூபாய் 25 அளித்துள்ளனர். இவ்வாறு தான் **தமிழர் இயக்கம்** என்ற பெயரில் ஒரு இயக்கம் உருவாகியுள்ளது.

தொடரும்...

Posted at Egmore RMS,Pathirika Channel, Chennai-08
date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 licenced to post wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# கழகத் தலைவர் பங்கேற்ற நிகழ்ச்சிகள்

## கொளத்தூரில் கண் மருத்துவ முகாம்!



இலவச மருத்துவ முகாமை கழகத் தலைவர் கொளத்தூர் மணி தொடங்கி வைத்தார். சேலம் வள்ளி சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை மற்றும் மேக்ஸிவிஷன் கண் மருத்துவமனை சார்பாக 23.11.2025 ஞாயிற்றுக்கிழமை சேலம் மாவட்டம் கொளத்தூர் ஸ்ரீ கொளத்தூர் கஃபே, S. K. C கார்னரில் நடைபெற்ற இலவச மருத்துவ முகாமை கழகத் தலைவர் கொளத்தூர் மணி தொடங்கி வைத்தார்.

இம்முகாமை சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையில் பணிபுரியும் கழகத் தோழர். ஜலகண்டாபுரம் ரமேஷ் அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார். இந்நிகழ்வில் கழக தலைமைக் குழு உறுப்பினர் காவை. ஈஸ்வரன், கொளத்தூர் ஒன்றியப் பொறுப்பாளர் விஜயகுமார், செட்டியூர் மாரி, கத்தரிப்பட்டி பழனியப்பன் ஆகிய கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

## இளங்கோவன்- வினிதா சுயமரியாதை திருமணம்!



சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், குறுக்குப்பட்டி கிராமம், பவளத்தனூர் பகுதியைச் சேர்ந்த கழகத் தோழர். சரவணன்- சித்ரா ஆகியோரின் மகன் இளங்கோவன் அவர்களுக்கும் கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் வட்டம், உடையார்குடி கிராமம், அண்ணாநகர் பகுதியைச் சேர்ந்த கண்ணன்- ஆனந்தி ஆகியோரின் மகள் வினிதா அவர்களுக்கும் 04.11.2025 காலை 11 மணியளவில் மேட்டூர்ள பெரியார் படிப்பகத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில், சேலம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கிருஷ்ணன் முன்னிலையில் இணையர்களுக்கு சுயமரியாதை திருமணம் நடத்தி வைக்கப்பட்டது. சுயமரியாதை திருமணம் செய்து கொண்ட இணையர்கள் கழகத் தலைவரிடம் பயணச் செலவிற்காக ரூ. 5000 வழங்கினர்.

## க.கிருட்டிணமூர்த்தி படத்திறப்பு & நினைவேந்தல்



திராவிடர் விடுதலைக் கழக சேலம் கிழக்கு மாவட்டத் தலைவர் கருப்பூர் க.சக்திவேல் சகோதரரும், ஓய்வுபெற்ற ஆசிரியரும், சேலம் மாவட்ட திராவிடர் கழக காப்பாளருமான க.கிருஷ்ணமூர்த்தி படத்திறப்பு மற்றும் நினைவேந்தல் நிகழ்வு 11.11.2025 செவ்வாய்கிழமை கருப்பூர் சாமிநாயக்கன்பட்டியில் உள்ள அவரது இல்லத்தில், திராவிடர் கழக மாவட்டக் காப்பாளர் பழநி.புள்ளையணன் தலைமையில் நடைபெற்றது.

சேலம் அம்மணி மருத்துவமனை நிர்வாக இயக்குனர், மருத்துவர் இரா. சரவணன் முன்னிலை வகித்தார். பெரியார் சுயமரியாதை பிரச்சார நிறுவனத் தலைவர் பொத்தனூர் க.சண்முகம் படத்தை திறந்து வைத்து நினைவேந்தல் உரையாற்றினார்.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி பேசும்போது, தோழர் க.கிருட்டிணமூர்த்தியும் அவரது குடும்பமும் விடுதலைப் புலிகளுக்கு உதவி செய்ததையும், அவர் பெரியாரிய இயக்கப் பணிகளை செய்த உணர்வுகளைப் பகிர்ந்து நினைவேந்தல் உரையாற்றினார்.

இறுதியாக சேலம் கிழக்கு மாவட்டத் தலைவர் சக்திவேல் நன்றியுரையாற்றினார். இந்நிகழ்வில் கழகத் தோழர்கள், தி.க., தி.மு.க. தோழர்கள், பா.ம.க. சட்டமன்ற உறுப்பினர் இரா.அருள், அ.இ.தி.மு.க.வினர், பா.ம.க.வினர் பலர் கலந்துகொண்டனர்.



## கழக நாட்காட்டிக்கு முன்பதிவு செய்யலாம்!

திரைத்துறையைச் சார்ந்த (மறைந்த) கடவுள், மத மறுப்பாளர்களின் படங்கள், கருத்துக்கள் அடங்கிய, 2026-ஆம் ஆண்டுக்கான கழக நாட்காட்டி விரைவில் தயாராக உள்ளது. ரூ.100 மதிப்புள்ள நாட்காட்டி முன்பதிவு சலுகை விலையில் ரூ 75/- மட்டும். 2025 டிசம்பர் 15-க்கு முன்னதாக முன்பதிவு செய்பவர்களுக்கு மட்டுமே நாட்காட்டி வழங்கப்படும்.

- தபசி குமரன்,
தலைமை நிலையச் செயலாளர்
திராவிடர் விடுதலைக் கழகம்.
22.11.25. தொடர்பு எண்: 99417 59641

**புரட்சிப் பெரியார் முழக்கம்**

ஆண்டு சந்தா ரூ.300/- | ஐந்தாண்டு சந்தா ரூ.1500/-

தொடர்புக்கு: 15. தோழமை, வெங்கடேஸ்வரா நகர், பெருங்குடி, சென்னை 600096. | பேச: 63697 76351

முழக்கம் தொடர்பான சந்தேகங்களுக்கு மேற்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளவும்.

மின்னஞ்சல் : NEWSDVK@GMAIL.COM

# சேலம் இளைஞர் அணி சார்பில் தெருமுனைக் கூட்டங்கள்!

கே.ஆர்.தோப்பூரில் கணேசன் இல்லத்தில் 18.11.2025 செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணியளவில், சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் டேவிட் தலைமையில், சேலம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கிருஷ்ணன் முன்னிலையில் நடைபெற்றது.



**கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:**

**தீர்மானம்-1:** "மனிதம் நமது அடையாளம் - ஜாதி நமக்கு அவமானம்" தெருமுனைக் கூட்டம் எதிர்வரும் நவம்பர் 29,30 ஆகிய நாட்களில் புதிய பகுதிகளில் நடத்துவது.

**தீர்மானம்-2:** டிசம்பர் 14 அன்று "மனிதம் நமது அடையாளம்" "ஜாதி நமக்கு அவமானம்" நிறைவுக்கூட்டம் பொதுக்கூட்டமாக தாரமங்கலம் அண்ணா சிலை பகுதியில் நடத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம்-3:** புரட்சிப் பெரியார் முழக்க இதழை கல்லூரி மாணவர்கள், இளைஞர்கள் மத்தியில் அதிகளவில் கொண்டு சேர்ப்பது குறித்தும், புதிய சந்தாக்களை அதிகப்படுத்தி வருகிற டிசம்பர் 24 அன்று மாவட்டக் கழகத்திடம் ஒப்படைப்பது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

**தீர்மானம்-4:** டிசம்பர் 24 கோவையில் நடைபெறும் ஜாதிய தீண்டாமைக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் இளைஞர்கள் அதிகளவில் கலந்து கொள்வது எனவும் தீர்மானிக்கபட்டது.

தாரமங்கலம் ஒன்றியச் செயலாளர் சரவணன் நன்றி கூற கலந்துரையாடல் கூட்டம் நிறைவு பெற்றது. சேலம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் தங்கதுரை, பவளத்தானூர் தனசேகர், கே.ஆர்.தோப்பூர் கண்ணன், கே.ஆர். தோப்பூர் கணேசன், சேலம் மாவட்ட இளைஞர் அணிச் செயலாளர் பிரபாகரன், சேலம் மாநகர அமைப்பாளர் தேவராஜ், சேலம் நவராஜ், கொங்கனாபுரம் கோகுல், தமிழ்நாடு மாணவர் கழக மாவட்ட அமைப்பாளர் கவியரசு, சேலம் வெங்கடேஷ், நங்கவள்ளி நகரச் செயலாளர் சந்திரசேகர், சிவதாபுரம் அவினேஷ், நங்கவள்ளி நித்யா, இளம்பிள்ளை சேகர், சிந்தாமணியூர் முருகேசன் ஆகியோர் கலந்து கொண்டனர். அனைவருக்கும் கணேசன் தேநீர் வழங்கினார்.

# 57 நிகழ்ச்சிகளை நடத்திய சென்னை மாவட்டக் கழகம்!

மயிலாப்பூரில் கழகத் தலைமை அலுவலகத்தில் 18.11.2025 அன்று சென்னை மாவட்டச் செயலாளர் உமாபதி தலைமையில் சென்னை மாவட்டக் கழக கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. தோழர் இரண்யா கடவுள் மறுப்பு உறுதிமொழியை வாசித்தார். கடந்த கலந்துரையாடல் கூட்டத்தில் இருந்து தற்போது வரை 57 நிகழ்ச்சிகளை சென்னை மாவட்டக் கழகம் ஏற்பாட்டில் நடைபெற்றிருக்கிறது. கடந்த ஜூன் முதல் தற்போது வரை நடைபெற்ற நிகழ்ச்சிகளின் பட்டியலை தோழர் உமாபதி வாசித்தார்.

திமுக இளைஞர் அணி நடத்திய அறிவுத் திருவிழாவில் கழக வெளியீடுகள் ரூ. 81980 விற்பனையானது. அதை முழுபொறுப்பேற்று நடத்திய தென்சென்னை மாவட்ட அமைப்பாளர் எட்வின் பிரபாகரன் மற்றும் அதற்கு மூலக் காரணமாக இருந்த தோழர் பிரகாசு இருவரையும் பாராட்டி கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன் சால்வை அணிவித்தார். முற்போக்கு புத்தகக் காட்சியில் கழகத்தின் நிமிர்வோம் பதிப்பகம் இடம்பெற்று, நூல்கள் விற்க துணைநின்ற மாவட்டக் கழகத்தோழர்கள் அனைவருக்கும் பாராட்டு தெரிவிக்கப்பட்டது.





தோழர்கள் எட்வின் பிரபாகரன், அருண் (இளைஞரணி மாவட்ட அமைப்பாளர்), அருண் கோமதி (தாம்பரம் நகர அமைப்பாளர்), பேரன்பு (ஒருங்கிணைப்பாளர் தமிழ்நாடு மாணவர் கழகம்), பிரகாசு, தினகரன், மனோகரன், அன்பரசு, ஆகியோர் தங்களது கருத்துக்களையும் பகிர்ந்து கொண்டனர்.

வலைதள மேம்பாடு, தொழில்நுட்ப அணி செயல்பாடுகள், செயற்கை நுண்ணறிவுப் பயிற்சி, ஆகியவை குறித்து விவாதிக்கப்பட்டது. தோழர்கள் பூர்ணிமா, இராசேந்திரன் ஆகியோர் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர். தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன் கழக வெளியீடுகளை வழங்கி, அவர்களை வரவேற்றார். மாவட்டம், பகுதி பொறுப்பாளர்கள் 40-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1.புரட்சிப் பெரியார் முழக்கம் சென்னை மாவட்டம் சார்பாக 1,700 சந்தா திரட்டி வருகிற டிசம்பர் 31-க்குள் ஒப்படைப்பது.

(சந்தா குறித்து பேசிய சில நிமிடங்களிலே தோழர்கள் 1700 சந்தாவுக்கான ரசீது புத்தகத்தை வாங்கி கொண்டனர். இளைஞரணி, மாணவரணி, மாவட்டக் கழகத் தோழர்கள் ஆர்வமுடன் ரசீது புத்தகத்தை பகிர்ந்துக் கொண்டனர் )

2.வருகிற சென்னை புத்தக காட்சியில் நிமிர்வோம் பதிப்பகம் பங்குபெற ஏற்பாடுகள் செய்து, மாவட்டக் கழகம் முழு ஒத்துழைப்பு வழங்குவது.

3.கோவை தீண்டாமை ஒழிப்பு ஆர்ப்பாட்டத்தில் பெருந்திரளான எண்ணிக்கையில் பங்கேற்க முடிவு.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : November 28, 2025

Owned and Published by : k. Rajendran, From 29, Journalists Colony, Thiruvalluvar Nagar, Thiruvanmiyur, Chennai - 600 041. Ph: 6369776351
and Printed by : S. Theesmas, at Lilly Soosai Offset, New no.8, Old No.12/1, Mohammed Usain Lane, Royapettah, Chennai - 600 014.
Editor ; k. Rajendran